

# பரந்தாமனும் பட்சிராஜனும்

– ஜனஸ்ரீ மூகாம்பிகை

பறவைகளுக்கெல்லாம் அரசனாக இந்திரனாக விளங்குபவர் கருடன். கருடாழ்வான் என்று வைணவர்களால் பெரிதும் போற்றி வணங்கப்படுபவர். பரமனிடமே மனம் ஆழ்ந்து இருப்பவரை 'ஆழ்வான்' என்று கூறுகிறோம். கருடன் ஆழ்வான் மாத்திரமல்ல, ஸ்ரீமந்நாராயணருக்கு வாகனமாகவும், கொடியாகவும் விளங்குபவர். பட்சிராஜன் வேத சொரூபம். பரந்தாமன் வேதத்தின் பொருள். பெருமாளின் பூரண அவதாரங்களான ஸ்ரீராம அவதாரத்திலும் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலும் கருடன் உதவி செய்திருக்கிறார். ஸ்ரீராமலட்சுமணர் நாகபாசத்தால் கட்டுண்டிருந்தபோது, கருடன் அங்குவந்து அதிலிருந்தும் விடுதலை செய்தார். நரகாசுர யுத்தத்தின்போது ஸ்ரீ கிருஷ்ணருக்கு வாகனமாக இருந்து உதவி செய்தார். தாயின் துன்பத்தை நீக்கப் பிறந்த தவப்புதல்வர் இவர். கருடனுடைய தந்தை கஸ்யப மகரிஷி. தாய் வினதை. கஸ்யபருடைய முதல் பத்தினி அதிதி என்பவள். தேவேந்திரன் முதலான தேவர்களுடைய தாய். மற்றொரு மனைவியின் பெயர் கத்ரு. இவள் ஆயிரம் சர்ப்பங்களைத் தன் பிள்ளைகளாகப் பெற்றாள்.

ஒரு சமயம் வினதையும் கத்ருவும் சமுத்திரக் கரையில் உலவிக் கொண்டிருந்தனர். தூரத்தில் தேவேந்திரனுடைய குதிரை "உச்சைஸ்வரஸ்' மேய்ந்து கொண்டிருந்தது. அது பாற்கடலில் தோன்றிய பால்வண்ணக்குதிரை. அதைப் பார்த்து மனதில் வஞ்சக எண்ணம் கொண்ட கத்ரு "அதன் வால் கறுப்பாக உள்ளதன்றோ?" என்று வினதையைப் பார்த்து வினவினாள்.

கத்ருவிடம் "பூரண வெண்மையாக உள்ள குதிரையைப் பார்த்து, வால்கறுப்பு என்று கூறுகிறாயே?" என்று வினதை கூறினாள். இந்த விஷயத்தில் இருவருக்கும் விவாதம் ஏற்பட்டது.

கத்ரு, "குதிரையின் வால் கறுப்பாக இல்லை என்றால் நான் உனக்கு அடிமையாகிறேன். கறுப்பாக இருந்தால் நீ எனக்கு அடிமையாக வேண்டும், சம்மதமா?" என்றாள்.

வினதையும் அந்தப் பந்தயத்திற்கு உடன்பட்டாள். நாளையதினம் குதிரையை அருகில் சென்று பார்ப்போம் என்று முடிவு செய்து அவரவர் இல்லம் திரும்பினர்.

கத்ரு தன் பிள்ளைகளான சர்ப்பங்களைப் பார்த்து, "நீங்கள் அக்குதிரையின், வாலில் கறுப்பு நிறமுள்ள ரோமங்கள் போலாகிவிடுங்கள்" என்றாள்.

சில சர்ப்பங்கள் அதற்கு உடன்படவில்லை. அவர்களைக் கத்ரு, "ஜனமேஜயன் என்ற பாண்டவர் வம்சத்து ராஜரிஷி நடத்தும் சர்ப்ப யாகத்தில் நீங்கள் அக்னியில் வீழ்வீர்கள்!" என்று சபித்தாள்.

உயிருக்குப் பயந்து சில சர்ப்பங்கள் அவள் சொற்படியே செய்தன. மறுநாள் குதிரையின் வால் கறுநிறமாக இருப்பதைக் காட்டி வினதையைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டாள் கத்ரு.

ஒரு சமயம், சிருஷ்டிகர்த்தாவாகிய கஸ்யபர் ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்திற்கு தேவர்கள், கந்தர்வர்கள், மகரிஷிகள் அனைவரும் திரண்டு வந்து உதவி செய்தனர். யாகாக்கினியில் இடுகின்ற 'சமித்' என்ற கட்டைகளை அனைவரும் கொணர்ந்தனர். சக்தி நிறைந்த தேவேந்திரர் மலைபோன்ற சமித்தை எடுத்து வந்து கொண்டிருந்தார். வழியில் 'வாலகில்யர்கள்' என்ற மகரிஷிகளைக் கண்டார். கட்டைவிரல் அளவே அவர்களது சரீரம், அவர்களும் யாகத்திற்கான சமித்தை,